**செ.வெ.எண்:28** **நாள்:14.04.2018**

# அரியலூர் மாவட்டம், பொட்டவெளி கிராமத்தில் சிறப்பு கிராமசபைக் கூட்டம்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், பொட்டவெளி கிராமத்தில் சிவன் கோவில் அருகே ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **"பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 127-வது பிறந்தநாளை முன்னிட்டு"** **சிறப்பு கிராம சபைக் கூட்டம்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (14.04.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:-**

பாரத ரத்னா டாக்டர்.அம்பேத்கர் அவர்களின் 127-வது பிறந்தநாளை முன்னிட்டு, அரியலூர் மாவட்டத்தில் 201 கிராம ஊராட்சிகளிலும் கிராம சுவராஜ் அபியான் - கிராம சுயாட்சி பிரச்சாரம் குறித்து சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் கிராம சுவராஜ் அபியான் - கிராம சுயாட்சி பிரச்சாரம் ஏப்ரல் 14 முதல் மே 5 வரை மேற்கொள்வதற்கு 10 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கிராம ஊராட்சிகளிலும் மற்றும் இதர ஊராட்சிகளிலும் சமூக ஒற்றுமையினை மேம்படுத்துதல், பிரதம மந்திரியின் குடியிருப்பு திட்டத்தின்கீழ் வீடு இல்லாதவர்களை பயனடையசெய்தல், விவசாயிகளின் வருவாயினை பெருக்குதல், மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல், பொது சுகாதாரம் மற்றும் ஊராட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை மையப்படுத்தி அரசின் 7 துறைகளை ஒன்றிணைத்து கிராம சுயாட்சி பிரச்சாரம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், இக்கிராம சபைக்கூட்டத்தில் அண்ணல் அம்பேத்காரின் சிந்தனை குறித்த கருத்து பட்டறை குறித்தும், இருப்பிட சான்று, வருமான சான்று, சாதி சான்று பெறுதல் குறித்தும், மாணாக்கர்களுக்கான உதவித்தொகை பெறுதல் குறித்தும், புதியதாக வங்கி கணக்கு துவங்குதல் மற்றும் வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்தல், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டசத்து குறைபாட்டினை நீக்குதல் குறித்தும் விவாதிக்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கே.லோகேஷ்வரி, துணை இயக்குநர் (சுகாதாரத்துறை) வீ.சி.ஹேமசந்த்காந்தி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம்) பெ.ஜெயராணி, வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**